Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 127 /2023

## Deposition of P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | வெங்கடாசலம் |
| Father's Name | : | தமிழ்செல்வன் |
| Village | : | குருவினான்கோட்டை |
| Religion | : | இந்து |
| Age | : | **26/2023** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.01.2024**
( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் குருவினான்கோட்டை கிராமத்தில் வசித்து ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். விவசாயமும் செய்து வருகிறேன். எதிரி விக்னேஷ்வரன் (எ) விக்கி என்பவரை எனக்கு தெரியும். சம்பவத்திற்கு சுமார் **10** நாள்களுக்கு முன்பு ஓட்டக்குளம் கிராமத்தில் நடந்த ஜல்லிக்கட்டில் அரவிந்த் என்பவர் மாடு அவிழ்த்து விட்டது தொடர்பாக அவருக்கும் எதிரி விக்னேஷ்வரன் என்பவருக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. அதன் பின்னர் **13.05.2023** ஆம் தேதி காலை **11.00** மணியளவில் சம்மட்டிவிடுதி **4** ரோட்டில் உள்ள ரவி உணவகத்தில் நானும் அரவிந்த், சரண் ஆகிய மூவரும் சாப்பிட்டு கொண்டிருந்தபோது எதிரி விக்னேஷ்வரன் அங்கு வந்து தேவடியா பயலே என்று எங்களை பார்த்து அசிங்கமாக திட்டி கையில் வைத்திருந்த அருவாளால் சாவுடா என்று சொல்லி அரவிந்தை ஓங்கி இடதுகை மணிக்கட்டில் வெட்டினார். மீண்டும் அரவிந்தை எதிரி விக்னேஷ்வரன் வெட்ட முயன்றபோது நான் அதனை தடுத்ததால் வெட்டு எனது இடது தோள்பட்டையில் விழுந்து காயம் ஏற்பட்டது. ( சாட்சி தனது இடது தோள்பட்டையில் வெட்டு காயத்தினால் ஏற்பட்ட சிறிய தழும்பினை காண்பித்தார்) பிறகு எதிரி மீண்டும் பிரச்சனை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு ஓடிவிட்டார். காயம்பட்ட நானும் அரவிந்தனும் என்னுடைய இருசக்கர வாகனத்தில் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். அரவிந்த் என்பவருக்கு இடதுகை மணிக்கட்டில் நரம்பில் வெட்டுப்பட்டு அதிகமாக இரத்தம் வந்ததால் அவரை மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என்னிடம்

காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் என்னுடையதுதான். அன்றைய தினம் நான் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது மதியம் சுமார் **2.30** மணிக்கு போலிசார் வந்து விசாரித்தனர். அப்போது அந்த புகார் வாக்குமூலத்தை அளித்தேன். புகார் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல போலிசார் எழுதிக்கொண்டார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் படித்து பார்த்து புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன். சாட்சியால் அளிக்கப்பட்ட புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

<u>ம.வி.இல்லை</u>